7. அறிவிப்புகள்

(அ) சட்டமன்ற உறுப்பினர்களுக்கான புத்தறிவுப் பயிற்சிக் கருத்தரங்கு தள்ளிவைப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இன்று காவிரி நதிநீர்ப் பிரச்சினை குறித்து அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டம் நடைபெறவிருப்பதால் தலைமைச் செயலகத்தில் உள்ள நாமக்கல் கவிஞர் மாளிகையில் பத்தாவது தளத்தில் உள்ள மாநாட்டுக் கூட்ட மண்டபத்தில் இன்று நடைபெறுவதாக இருந்த புத்தறிவுப் பயிற்சிக் கருத்தரங்கு தள்ளி வைக்கப்பெறுகிறது என்றும், அந்தக் கருத்தரங்கு 10–9–2001 அன்று மாலை 4–30 மணிக்கு மேற்படி மண்டபத்தில் நடைபெறும் என்றும் அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

4. தகவல் கோரல்–தொடர்ச்சி

(இ) கீழ்பவானி அணையிலிருந்து காவிரி ஆற்றுக்குத் தண்ணீர் திறந்துவிடுவது குறித்த செய்தி

திரு. மு.பெ. சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே…

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சாமிநாதன், என்ன சொல்லப் போகிறீர்கள்? (குறுக்கீடு) சொல்லுங்கள்.

திரு. மு.பெ. சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு மாவட்டத்திலுள்ள கீழ்பவானி அணைத் திட்டத்திலிருந்து கடந்த மாதம் 15 ஆம் தேதி பாசனத்திற்காக தண்ணீர் திறந்துவிடப்பட்டது. அதை நம்பி அங்கே பல்லாயிரக்கணக்கான விவசாயிகள் நெல் நடவு நடுவதற்காக ஆயத்தப் பணிகளில் ஈடுபட்டிருக்கின்றார்கள். ஆனால் கடந்த வாரம் அங்கே ஒரு செய்தித் தாளிலே அணையிலிருந்து காவிரி ஆற்றிற்கு காவிரி டெல்டா பகுதி பாசனத்திற்காக தண்ணீர் திறந்துவிடப்படுவதாக செய்தி அறிந்து அங்கே விவசாயிகள் மத்தியிலே பதட்ட சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. அப்படி ஏதாவது பரிசீலனை அரசிடம் உள்ளதா? அல்லது வெறும் வதந்தியா என தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மானியக் கோரிக்கையிலே பேசும்போது இதற்கும் பதில் சொல்லுங்கள்.